# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 42

# நான்கு இரதங்கள்





# The Four Chariots

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# நான்கு இரதங்கள்

# Four Chariots




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,

பிதாவாகிய தேவனாலும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

இன்றைக்கு நாம் பார்க்கப் போகிற பாடம் 'நான்கு இரதங்கள்" . இது தேவன் தம்முடைய ஊழியக்காரனாகிய சகரியாவிற்கு காண்பித்த தரிசனம் ஆகும். இந்த தரிசனத்தில் மறைந்துள்ள ஆழமான சத்தியங்களை கற்றுக்கொள்ள தேவன்தாமே நமக்கு கிருபை செய்வாராக. இப்போது சகரியா பார்த்த தரிசனம் என்ன என்று பார்ப்போம்.

**சகரியா 6:1-8**

'நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து, இதோ, இரண்டு பர்வதங்களின் நடுவாகப் புறப்பட்டு வருகிற நாலு இரதங்களைக் கண்டேன். அந்தப் பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாயிருந்தன. முதலாம் இரதத்தில் சிவப்புக்குதிரைகளும், இரண்டாம் இரதத்தில் கறுப்புக் குதிரைகளும், மூன்றாம் இரதத்தில் வெள்ளைக் குதிரைகளும், நான்காம் இரதத்தில் புள்ளிபுள்ளியான சிவப்புக் குதிரைகளும் பூட்டியிருந்தன. நான் என்னோடே பேசின தூதனை நோக்கி - ஆண்டவனே , இவைகள் என்னவென்று கேட்டேன். அந்தத் தூதன் எனக்கு பிரதியுத்தரமாக, இவைகள் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய சமூகத்தில் நின்று புறப்படுகிற வானத்தினுடைய நாலு ஆவிகள் என்றார். ஒன்றில் பூட்டப்பட்டிருந்த கறுப்புக் குதிரைகள் வடதேசத்துக்குப் புறப்பட்டுப் போயின. வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னாலே புறப்பட்டுப் போயின. புள்ளிபுள்ளியான குதிரைகள் தென்தேசத்துக்குப் புறப்பட்டுப்போயின. சிவப்புக் குதிரைகளோவென்றால் புறப்பட்டுப்போய், பூமியிலே சுற்றித்திரியும்படி கேட்டுக்கொண்டன. அதற்கு அவர் , போய் பூமியில் சுற்றித் திரியுங்கள் என்றார்.அப்படியே பூமியிலே சுற்றித்திரிந்தன. பின்பு அவர் என்னைக் கூப்பிட்டு பார், வடதேசத்துக்குப் புறப்பட்டுப் போனவைகள், வடதேசத்திலே என் கோபத்தைச் சாந்திபண்ணிற்று என்று என்னோடே சொன்னார்"

சகரியாவிற்கு தேவன் ஒரு தரிசனம் காண்பிக்கிறார். இரண்டு பர்வதங்களுக்கு நடுவே 4 இரதங்கள் புறப்பட்டு வருகிறது. அந்த பர்வதங்கள் வெண்கலப் பர்வதங்களாக இருந்தன. இந்த நான்கு இரதங்களில் பூட்டியிருந்த குதிரைகள் சிவப்பு நிறத்தில் முதல் இரதத்திலும், இரண்டாவது இரதத்தில் கருப்பு நிற குதிரைகளும் மூன்றாவது இரதத்தில் வெள்ளைக் குதிரைகளும், நான்காவது இரத்தில் புள்ளி, புள்ளியானதும், சிவப்பு நிறமுடையதுமான குதிரைகள் பூட்டப்பட்டிருந்தன.

கருப்புநிற குதிரைகள் வடதேசத்துக்கும், வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னாலும் , புள்ளிபுள்ளியான குதிரைகள் தென்தேசத்திற்கும், சிவப்பு குதிரைகள் பூமியில் சுற்றிதிரியும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதாக வாசிக்கிறோம்.

இந்த தரிசனத்தில் தேவனுடைய சத்தியங்கள் ஆழமாக உள்ளன. இவைகளை நாம் நிதானமாக பகுத்து படிக்கவேண்டும்(2தீமோ 2:15). மட்டுமல்ல, தேவனுடைய புஸ்தகத்தில் தேடி வாசிக்கவேண்டும்.

**ஏசாயா 34:16**

"கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடிவாசியுங்கள், இவைகளில் ஒன்றும் குறையாது,
இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது, அவருடைய வாய் இதைச் சொல்லிற்று,
அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்"

இந்த தரிசனத்தில் நாம் பார்க்கும்போது,

இரண்டு வெண்கலப் பர்வதங்கள் எதைக் குறிக்கின்றன?

நான்கு இரதங்கள் எதைக் குறிக்கின்றன?

நான்கு இரதங்களில் பூட்டியிருந்த குதிரைகள் எதற்கு அடையாளமாக உள்ளது?

திசைகள் எதைக் குறிக்கின்றன?

இவைகளைக் குறித்து நாம் இப்போது பார்க்கலாம்.

"நான் திரும்பவும் என் கண்களை ஏறெடுத்து"

என்று பார்க்கிறோம். அப்படியானால் ஏற்கனவே இந்த தரிசனத்தை தேவன் தம்முடைய ஊழியக்காரனாகிய சகரியாவிற்கு காண்பித்திருக்கிறார். இப்போது '**திரும்பவும்**" என்று ஆரம்பிப்பதால் மறுபடியும் தேவன் இந்த தரிசனத்தை சகரியாவிற்கு காண்பிக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஆகவே இந்த தரிசனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. முதலாவதாக இந்த இரண்டு பர்வதங்கள் எதற்கு அடையாளமாக இருக்கிறது என்று நாம் பார்க்கலாம்.

### வெண்கல பர்வதங்கள் - விளக்கம்

பர்வதம் எதைக் குறிக்கிறதென்று முந்தைய பாடங்களில் நாம் பார்த்திருக்கிறோம்.

**தானியேல் 2:44**

"அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத
ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்

**ஏசாயா 2:2**

"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்".

இவ்வசனங்களிலிருந்து பர்வதம் ராஜ்ஜியத்திற்கு அடையாளமாக உள்ளது. வெண்கலப் பர்வதங்கள் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் மூலபாஷையில்,இதன் அர்த்தம், 'செம்பு" என்று கூறப்பட்டுள்ளது (Strongs Hebrew No # 5178)

இந்த செம்பு எதற்கு அடையாளம் என்றால், பரிபூரண மனித நிலைமையை அதாவது மாம்சீக நீதிமான் நிலையைக் குறிக்கிறதாக நாம் ஆசரிப்புக் கூடாரத்தில் பார்த்தோம்.

இந்த செம்பு நன்றாக மெருகேற்றினால்(பாலீஸ் செய்தால்) பார்ப்பதற்கு பொன்னைப்போல இருக்கும். பொன் தேவனைகுறிக்கிறது. பொன்னைப்போல் என்பது தேவனைப்போல் என்பதற்கு அடையாளமாக உள்ளது. இது எதைக் குறிக்கிறதென்றால் தேவன் மனிதனை தம்முடைய சாயலாக உண்டாக்கினதை குறிக்கிறது.

**ஆதியாகமம் 1:27**

"தேவன தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்"

அப்படியானால் வெண்கலப் பர்வதங்கள் என்பது தேவசாயலாய் உண்டாக்கப்பட்ட பரிபூரண மனிதனுடைய ஆளுகையை(ராஜ்ஜியத்தை) குறிக்கிறது. இரண்டு பர்வதங்கள் இரண்டு இராஜ்ஜியங்களைக் குறிக்கிறது.

## முதலாம் பர்வதம் - முதல் இராஜ்ஜியம

இந்த ராஜ்யம் ஆதாமுக்கு கொடுக்கப்பட்டது

**ஆதியாகமம் 1:26**

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணி--களையும் ஆளக்கடவர்கள் என்றார்"




**சங்கீதம் 8:5**

"நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர், மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்"

மனிதனை மகிமை, கனத்தினால் முடிசூட்டினார் என்பது பூமியின் மீதான இராஜ்யத்தின் ராஜரீகத்தை குறிக்கிறது. ஆதாம் பாவம் செய்ததினால் மனிதனை விட்டு இந்த ராஜ்யம்(பரிபூரண மனித ஆளுகை) நீக்கப்பட்டது. முதலாவது வெண்கலப் பர்வதம் என்பது பரிபூரண மனிதரைக் கொண்டிருந்த முதல் ராஜ்யமாகும்.

## இரண்டாம் பர்வதம் - இரண்டாம் இராஜ்ஜியம்

இந்த இராஜ்ஜியம் இனி வரப்போகிற ராஜ்ஜியம் ஆகும். இதைக் குறித்து இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது

**மத்தேயு 25:3 4**

‘ என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல்
உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்ஜியத்தை
சுதந்தரித்துக் கொள்ளுங்கள்”

என்று சொல்வதைப் பார்க்கலாம். மேலும்

**வெளிப்படுத்தல் 22:5**

‘.. அங்கே இராக்காலமிராது, விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு
வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசமாயிருப்பார். அவர்கள்
சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்“

இது இரண்டாம் இராஜ்ஜியத்தைக் குறிக்கிறது.

இது மனுக்குலத்திலிருந்து சீர்பொருந்தப்பட்ட ‘**செம்மறியாடு**”வகுப்பாருக்கு தரப்படும் பூமியின் மீதான இராஜரீகத்தைக் குறிக்கிறது. கீழ்ப்படிதலைக் காண்பித்து தாழ்மையைக் கற்றுக்கொள்பவர்கள் ஆயிரவருட ஆட்சியின்போது பெரும்பாதையான பரிசுத்த வழியில் நடந்து, பரிபூரண மாம்சீக நிலையை அடைந்திருப்பர்.

### *பள்ளத்தாக்கு - விளக்கம்*

இரண்டு பர்வதங்களுக்கும் நடுவே இருக்கும் பள்ளத்தாக்கு எதைக் குறிக்கிறதென்றால், இது ஒரு காலப்பகுதியைக் குறிக்கிறது. ஆதாமிலிருந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சி முடியும்வரை உள்ள காலப்பகுதியை அதாவது 7000 வருடத்தைக் குறிக்கிறது. இதையே தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் என்று வேதம் கூறுகிறது(ஆதி 2:2). இதிலிருந்து தேவனுக்கு ஒரு நாள் என்பது 7000 வருடங்கள் என்பதை நாம் அறியலாம். இந்த 7000 வருடங்களைக் குறித்து யோபு புஸ்தகத்தில்,

**யோபு 5:19**

“ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்,
ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடராது”

என்று பார்க்கிறோம்.

ஆறு இக்கட்டு என்பது இப்பொழுது இருக்கிற தீமை நிறைந்த உலகத்தையும்(6000 வருடம்) ஏழாவது என்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்1000 வருட அரசாட்சியில் மக்கள் சமாதானத்துடன்(பொல்லாப்பு தொடாது) வாழ்வதையும் குறிக்கிறது. யோபு எல்லா மனுக்குலத்திற்கும்

அடையாளமாக உள்ளார்.



**சங்கீதம் 23:4**

'நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும்.."

ஆம் பிரியமானவர்களே, இந்த பள்ளத்தாக்கு மனிதனுக்கு இந்த 7000 வருடத்திலும் மரணம் இருப்பதை சுட்டிக் காட்டுகிறது.

**ரோமர் 6:23** 'பாவத்தின் சம்பளம் மரணம்"

இந்த 7000 வருட காலப் பகுதியில்தான் 4 இரதங்கள் வருகிறது. இந்த இரதங்கள் எதற்கு அடையாளமாக உள்ளது என்று நாம் பார்க்கலாம்.

**இரதங்கள் விளக்கம்** :

தேவன் சகரியாவிற்கு இந்த தரிசனத்தைக் காண்பித்தவுடன் சகரியா கேட்கிறார் -

**சகரியா 6:4,5**



'நான் என்னோடே பேசின தூதனை நோக்கி: ஆண்டவனே இவைகள் என்னவென்று கேட்டேன். அந்த தூதன் எனக்குப் பிரதியுத்தரமாக: இவைகள் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய சமுகத்தில் நின்று புறப்படுகிற வானத்தினுடைய நாலு ஆவிகள் என்றார்"

தமிழில் **'நாலு ஆவிகள்"** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கில மொழிபெயர்ப்பில் ஆவிகள் என்ற பதம் காற்று(winds)என்றே குறிப்பிடப்பட்டுள்ளது (NIV Bible). 'காற்று" என்ற வார்த்தைக்கு மூலப் பதத்தில் 'ரூவாக்"(Ruwach-Strongs Hebrew-7307)என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் வேதத்தில் 'ஜீவ சுவாசத்தை" குறிக்கும் சொல்லாக உள்ளது

**யோபு 12:10**

'சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது"

இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது, ஆதாமிலிருந்து தேவனுடைய ஜீவ சுவாசம் பெற்ற முழு மனுக்குலத்திலிருந்து 4 வகையாக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட(பிரிக்கப்பட்ட) ஜனங்களின் வளர்ச்சியை குறிக்கிறது. அதாவது 6000 வருடக் காலத்தில் ஆதாமிலிருந்து தோன்றிய முழு மனுக்குலமும் 4 வகையாக பிரிக்கப்படுவதை இந்த நான்கு இரதங்கள் குறிக்கின்றன.

**அப்போஸ்தலர் 17:26**

"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து.."

நான்கு காற்றுகள், நான்கு ஆவிகள், நான்கு சுவாசங்கள் ஆகியவை உலக மனுக்குலத்தில்


காணப்படும் நான்கு வகுப்பாரை குறிக்கிறது. இவர்கள் இந்த நான்கு இரதங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நான்கு இரதங்களில் பூட்டப்பட்டுள்ள குதிரைகளின் நிறங்களையும் அவைகள் எதற்கு அடையாளமாக உள்ளது என்பதை நாம் பார்க்கலாம்.

பொதுவாக இரதங்கள் ஜனக்கூட்டத்தை இழுத்துச்செல்லும். ஆகவே இந்த இரதங்கள் ஜனக்கூட்டம் அல்லது வகுப்பாரைக் குறிக்கிறது. இந்த நான்கு இரதங்களும் வெவ்வேறு நிறங்களிலான குதிரைகளைக் கொண்டிருந்தது.

## 1. முதல் இரதம்

**சகரியா 6:2** “முதலாம் இரதத்தில் சிவப்புக் குதிரைகளும்...”

இது முதலாம் வகுப்பாரை அடையாளப்படுத்துகிறது. இந்த இரதம் யாரைக்குறிக்கிறது? இதற்கான பதில், சிவப்பு நிறத்தில் இருக்கிறது. இந்த சிவப்பு எதை அடையாளப்படுத்துகிறது?




**எண்ணாகமம் 19:2,3**

“கர்த்தர் கற்பித்த நியாயப்பிரமாணமாவது பழுதற்றதும் ஊனமில்லாததும், நுகத்தடிக்கு உட்படாததுமாகிய சிவப்பான ஒரு கிடாரியை உன்னிடத்தில் கொண்டு வரும்படி இஸ்ரயேல் புத்திரருக்குச் சொல்லுங்கள். அதை எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் ஒப்புக்கொடுங்கள். அவன் அதைப் பாளையத்துக்கு வெளியே கொண்டு போகக்கடவன். அங்கே அது அவனுக்கு முன்பாக கொல்லப்படக்கடவது”



இந்த “பலியானது” ஆசரிப்புக்கூடாரத்திற்குள் செலுத்தப்படாமல், பாளையத்துக்கு வெளியே செலுத்தப்பட்டது. பாளையத்திற்கு வெளியே என்பது எதைக் குறிக்கிறதென்றால், ஆசரிப்புக்கூடாரம் - புதிய ஏற்பாட்டுக்கு நிழல் என்று ஏற்கனவே பார்த்தோம். ஆசரிப்புக் கூடாரத்திற்கு வெளியே என்பது பழைய ஏற்பாட்டைக் குறிக்கிறது.

சிகப்பான கிடாரி கொல்லப்படுவது, பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டது. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்

**எண்ணாகமம் 19:9**

“சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கக்கடவன், அது இஸ்ரயேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக்கழிக்கும் ஜலத்திற்கென்று காத்து



வைக்கப்படவேண்டும். அது பாவத்தைப் பரிகரிக்கும்“

பழையஏற்பாட்டு முற்பிதாக்களாகிய ஆபேல் முதல் யோவான் ஸ்நானகன் வரை வாழ்ந்தவர்களின் பலியின்வாழ்க்கையைக் குறிக்கிறது

எபிரேயர் 11:35-37

“ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள். வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள். வேறு சிலர் நிந்தைகளையும், அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்.கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள். பரீட்சை பார்க்கப்பட்டார்கள். செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள்”


இவர்கள் தேவன்மீதும் அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதும் அசைக்கமுடியாத விசுவாசம் கொண்டிருந்தனர்.

சகரியா பார்த்த முதல் இரதம் சிவப்பு நிறமுடைய குதிரைகள் பூட்டப்பட்டது - பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் வகுப்பாரை குறிக்கிறது. இப்பொழுது இரண்டாம் இரதத்தைக் குறித்து காணலாம் -

## 2. இரண்டாம் இரதம்

சகரியா 6:2 “இரண்டாம் இரத்தில் கறுப்புக் குதிரைகளும்..”

இந்த கறுப்பு நிறம் எதைக் குறிக்கிறது என்று பார்ப்போமானால் பொதுவாக கறுப்பு நிறம் மரணத்திற்கு சம்பந்தப்பட்ட நிறம். சவப்பெட்டிகளில் கறுப்புநிற துணிகளைப் பயன்படுத்துவதையும், மரண வீடுகளில் கறுப்பு பேட்ஜ் அணிவதையும் நாம் பார்க்கலாம். இந்த வகையான வகுப்பார் மரணத்திற்கு தொடர்புடைய வகுப்பார் என்பதை இந்த கறுப்பு நிறம் குறிக்கின்றது.




இந்த மரணம் எதைக் குறிக்கிறதென்றால்,

ரோமர்6:2,3

“பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?”

இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக மாறின சபை வகுப்பார் ஆவர். இவ்வகுப்பாரின் மரித்த நிலைமை குறித்து வாசிப்போம் -

கொலோசெயர் 3:3

“நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே

தேவனுக்குள் மறைந்திருக்கிறது"

மேற்கூறின வசனங்கள் மூலமாக இந்த வகுப்பாரின் மரணம் ஒரு உடன்படிக்கை என்று வசனத்தில் வாசிக்கிறோம்.

**சங்கீதம் 50:5**

"பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்திலே கூட்டுங்கள் என்பார்"

இது பலியினாலான உடன்படிக்கையாகும். இந்த பலி எதை உள்ளடக்கியது?

**ரோமர் 12:1**

"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன"

இந்த வகுப்பார் தேவனுடைய சித்தம் செய்ய தங்கள் மாம்ச ஜீவியத்தை உண்மையாக அனுதினமும் பலிசெலுத்துகிறார்கள்.

இது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரமான சபையை(1,44,000) குறிக்கிறது. இவர்களுடைய மரணம் கிறிஸ்துவுக்குள்ளான மரணம் ஆகும். மேலும் இந்த கறுப்பு நிறம் "மணவாட்டியின் நிறத்தை" குறிக்கிறதாகவும் இருக்கிறது.

**உன்னதப்பாட்டு 1:5** "நான் கறுப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன் "

உன்னதப்பாட்டில் வரும் பெண், மணவாட்டிக்கு முன்னடையாளமாக இருக்கிறாள். இந்தப்பெண் தன்னைப் பற்றிக் கூறும்போது, தான் கறுப்பு நிறமுடையவள் என்றே கூறுவதைப் பார்க்கிறோம்.

**ஏன் கறுப்பு நிறம்?**

**உன்னதப்பாட்டு 1:6**

"நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள். வெய்யில் என்மேற்பட்டது"

**வெய்யில் எதைக்குறிக்கிறது?**

**மத்தேயு 13:20-21**

"கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன். ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய் கொஞ்சக்கால மாத்திரம் நிலைத்திருப்பான், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்"

துன்பங்கள் பாடுகள் , சோர்வுகள், போராட்டங்கள், நிந்தனைகள்... சபை இந்த உலகத்தில் உபத்திரங்கள் வழியாய் கடந்து செல்வதை இது குறிக்கிறது

**அப்போஸ்தலர் 14:22**

"சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்"

**1பேதுரு 1: 6**

"துன்பப்பட வேண்டியது அவசியமானதால் இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினால் துக்கப்படுகிறீர்கள்"

துன்பப்படுவதற்கான அவசியத்தை பவுல் கூறுகிறார்: -

**2தீமோத்தேயு 3:12** "தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறவர்கள் துன்பப்படுவார்கள்"

**யோவான் 16:33** "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.."

தீமை நிறைந்த உலகத்தில் இருளுக்கும் வெளிச்சத்திற்குமிடையில் நடக்கும் போராட்டம், உபத்திரங்கள் மற்றும் துன்பங்களுக்கு வழிநடத்தும். ஆனால் புதிய சிருஷ்டிகள் இந்த வழியின்மூலமே தெய்வீக சுபாவத்தின் குணலட்சணங்களை அடைகிறார்கள்.

**திசை - வடதேசம் - விளக்கம்**

**சகரியா 6:6**

"ஒன்றில் பூட்டப்பட்டிருந்த கறுப்புக் குதிரைகள் வடதேசத்துக்குப் புறப்பட்டுப்போயின"

இந்த கருப்புக் குதிரை பூட்டப்பட்ட இரதம் வடதேசத்திற்கு புறப்பட்டுப்போயின என்று பார்க்கிறோம். இந்த வடதேசம் எதைக் குறிக்கிறது? எந்த இடத்தைக் குறிக்கிறது என்று(வடதிசை என்பதை வடதேசம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

**சங்கீதம் 48:2**

"வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது அதுவே மகாராஜாவின் நகரம்".

**ஏசாயா 14:13**

"வடபுறங்களிலுள்ள ஆராதனைக்கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்.."

(சங்கீதம் 75:6-7ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கவும்)

மேற்கூறிய வசனங்களிலிருந்து வடதேசம் என்பது தேவனுடைய இருப்பிடத்தை- பரலோகத்தைக் குறிக்கிறது. ஆக கிறிஸ்துவின் சபை பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதை இரண்டாவது இரதம் குறிக்கிறது.




## 3. மூன்றாவது இரதம்



மூன்றாவதாக தெரிந்துகொள்ளப்படும் வகுப்பாரை இந்த தீர்க்கதரிசனம் கூறுகிறது.

மூன்றாவது இரதத்தில் பூட்டப்பட்டுள்ள குதிரைகள் வெள்ளை நிறமுடையவைகளாயிருந்தன.

**சகரியா6:3**

"மூன்றாம் இரதத்தில் வெள்ளைக் குதிரைகளும்"

இந்த வெள்ளை நிறம் எதைக் குறிக்கிறதென்றால்,

**ஏசாயா 1:18**

“உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்.

இந்த வெள்ளைநிறம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, கழுவப்பட்ட மக்களைக் குறிக்கிறது. இவர்களைக் குறித்து **வெளிப்படுத்தல் 7:13,14** ஐ பார்க்கும்போது,

‘வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள் என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன் : இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்”

யார் இவர்கள் என்று பார்க்கும்போது,

**வெளிப்படுத்தல் 7:9**

“இவைகளுக்குப்பின்பு நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளை தரித்து..”

நாம் ஏற்கனவே பார்த்தவாறு, இவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டோர் அல்லது திரள்கூட்டத்து வகுப்பாரைக் குறிக்கிறது. இவர்களை “மணவாட்டியின் தோழிகள்” என்று கீழ்க்காணும் வசனம் கூறுகிறது -

**சங்கீதம் 45:14**

“அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்.”

இந்த வகுப்பாரைக்குறித்து நம் கர்த்தர் மத்தேயு 25:2-3 வசனங்களில், புத்தியில்லாத கன்னிகைகள் என்கிறார். இவர்கள் இருக்கும் நிலைமை என்ன என்று நாம் வாசிப்போம் -

**மத்தேயு 25:3**

“புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள். எண்ணெயையோ கூடக் கொண்டு போகவில்லை”



இவர்களுடைய ஜீவியத்தில் சத்தியத்தின் ஆவியைப் பெற்றிருந்தும், உலகத்தின் ஆவியால் மேற்கொள்ளப்படுவதை இது குறிக்கிறது(மத்தேயு 13:22). இவ்வகுப்பார் தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய

வாக்குத்தத்தங்களின்மீதான நம்பிக்கையில் குறைவுள்ளவர்களாக காணப்பட்டு, சுத்திகரிப்புக்கான வாக்குத்தத்தத்தை பயன்படுத்தாமல் போவதை வாசிக்கிறோம் - 1யோவான் 1:9. இவ்வாக்குத்தத்தத்தை பயன்படுத்தத் தவறுவதன்மூலம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுக்கவேண்டிய அவசியத்திற்கு தள்ளப்படுகிறார்கள்.

## திசை

இந்த வெள்ளை நிறம் உள்ள குதிரைகள் பூட்டப்பட்ட 3வது இரதம் ஏற்கனவே வடதிசை சென்ற கருப்பு நிற குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்திற்குப் பின்செல்வதை பார்க்கிறோம்.

**சகரியா 6:6**

"வெண்மையான குதிரைகள் அவைகளின் பின்னாலே புறப்பட்டுப் போயின"

இந்த தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாருக்கும் பரலோக வாய்ப்பு இருப்பதை இது குறிக்கிறது.

## 4. நான்காவது இரதம்

**சகரியா 6:3**

".. நான்காம் இரதத்தில் புள்ளிபுள்ளியான சிவப்புக் குதிரைகளும் பூட்டியிருந்தன"




நான்காம் இரதத்தில் புள்ளிபுள்ளியான சிவப்புக் குதிரைகளும் பூட்டப்பட்டிருந்தன. மனுக்குலத்திலிருந்து நான்காவதாக தெரிந்துகொள்ளப்படும் வகுப்பாரை இது குறிக்கிறது. தமிழ் மொழிபெயர்ப்பில் தவறு ஏற்பட்டுள்ளது. ஆங்கில மொழிபெயர்ப்பில் - and in the fourth chariot grished and bay horses என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் புள்ளி புள்ளியானதும் சிவப்பானதுமான குதிரைகள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கவேண்டும். அதாவது இரண்டு விதமான நிறங்களை கொண்ட குதிரைகள், இது இரண்டுவிதமான வகுப்பாரைக் குறிக்கிறது.

**1. புள்ளி புள்ளியான நிறத்தை கொண்ட குதிரைகள்**

**2. சிவப்பு நிற குதிரைகள்** ( இங்கு சிவப்பு என்பது சிவப்பு நிறத்தை மூலமொழியில் குறிப்பதில்லை. grished(strongs Herbrew -#1261) 'barod' அதாவது ஒரு கடினத்தன்மையைக் குறிக்க (a strong colour) இந்த நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புள்ளிபுள்ளியான குதிரைகள் எதைக் குறிக்கிறதென்றால், மரித்தோரின் உயிர்த்தெழுதலிலிருந்து பாவம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வரும் பல வகைப்பட்ட பொதுவான உலக ஜனங்களைக் குறிக்கிறது.

**யோவான் 5:28**

"பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்"

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சியில், பூமியில் வாழப்போகிற சகல ஜனங்களையும் இவைகள் குறிக்கின்றன.

## உறுதியான நிறத்தையுடைய குதிரைகள்

இந்த வார்த்தை, அமோட்ஸ்(amots- Hebrew no:554) என்ற எபிரேய வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்படுகிறது. இதற்கு '**இருண்டநிறம்**'" என்று பொருள்படுகிறது. இது '**பிடிவாதமுள்ள, கடினமனம் படைத்த தன்மையைக்** குறிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சியில் சகல ஜனங்களுக்கும் சத்தியம் அறிவிக்கப்பட்டும் அப்போதும் மனந்திரும்பாத கடினத் தன்மையுள்ள ஜனங்களை குறிக்கிறது. இவர்களைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி கூறும்போது,

**ஏசாயா 26:10**

"துன்மார்க்கனுக்கு தயை செய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான். நீதியுள்ள தேசத்தில்
அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக்
கவனியாதே போகிறான்"

இவ்வகுப்பார் நியாயத்தீர்ப்பின் நாளில் வெள்ளாடு, செம்மறியாடு பற்றின உவமையில்,'வெள்ளாடுகள்" என அடையாளப்படுத்துகிற குணலட்சணங்களை பிரதிபலிப்பர்(மத் 25:41)

## இவைகளின் முடிவு

**சகரியா 6:7**

"சிவப்புக் குதிரைகளோவென்றால் பூமியில் சுற்றித் திரியும்படி கேட்டுக்கொண்டன.
அதற்கு அவர், போய்ப் பூமியிலே சுற்றித் திரியுங்கள் என்றார்.
அப்படியே பூமியிலே சுற்றித் திரிந்தன"

## பூமியிலே சுற்றித் திரிவது யார்?

**யோபு 1:7**

"கர்த்தர் சாத்தானை பார்த்து,'நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான்
கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக : பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து
வருகிறேன் என்றான '"

இது சாத்தானுடைய சுபாவமாக இருக்கிறது. பின்வரும் வசனத்திலும் இதைக் குறித்துக் காணலாம்

**1பேதுரு 5:8**

"உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல்
எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்".

இந்த வகுப்பார் எதிராளியின் ஆவியாகிய துணிகரமான கீழ்ப்படியாமை மற்றும் நீதிக்கு எதிராக போராடும் குணத்தைப் பெற்றிருப்பார்கள். சாத்தானுடைய அழிவையே இவர்களும் தேடிக்கொள்வர் என்பதை கீழ்க்காணும் வசனத்தில் காணலாம் -

**வெளிப்படுத்தல் 21:8**

"பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்"

இந்த இரண்டாம் மரணம்என்பது நித்தியத்துக்கும் அழிவதைக் குறிக்கிறது.

**மத்தேயு 25:41**

"அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய ஆக்கினியிலே போங்கள்"



இந்த நித்திய ஆக்கினை என்பது நித்திய மரணமாக இருக்கிறது(ரோமர் 6:23). இவர்கள் சாத்தானைப் போன்று மனப்பூர்வமாக மனந்திரும்ப விருப்பமில்லாத பாவிகள் ஆவர். இவர்களின் முடிவு நித்திய மரணம். இப்பொழுது இந்த இரதம் சென்ற திசையைக் குறித்து வாசிக்கலாம் -

**சகரியா 6:6** "புள்ளி புள்ளியான குதிரைகள் தென் தேசத்துக்குப் புறப்பட்டுப் போயின"

இந்த இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகளில் "புள்ளிபுள்ளியான" குதிரைகள் மட்டும் தென்தேசத்திற்கு சென்றதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சிவப்பு குதிரைகள் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் இந்த சிவப்புக் குதிரைகள் குறிப்பிடும் வகுப்பார் இரட்சிப்பை சுதந்தரிப்பதில்லை.

**தென் தேசம் எதைக் குறிக்கிறது?**

சங்கீதம் 89:11,12 'வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது.. வடக்கையும் தெற்கையும் நீர் உண்டாக்கினீர். இவ்வசனத்தில் வடக்கு திசை - பரலோகத்தைக் குறிக்கிறது
தெற்கு திசை - பூமியை குறிக்கிறது. இது பின்வரும் வசனத்தில் உறுதிப்படுத்தப்படுகிறது.

**சகரியா 14:4**

"ஒலிவமலை தன் நடுமையத்தில் கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம். அதினாலே ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்."

ஒலிவமலை - தேவனுடைய இராஜ்யத்தைக் குறிக்கிறது. அது இரண்டு பாகமாக பிரிகிறது -
ஒரு பாதி வடபக்கத்திலும் - 'புதிய வானத்தின் ஆவிக்குரிய அரசாட்சி"
ஒரு பாதி தென்பக்கத்திலும் -'புதிய பூமியின் மாம்சீக அரசாட்சியையும் "குறிக்கும்.
இவ்வாறு தென் திசை - பூமியை குறிக்கிறது

இந்த புள்ளி புள்ளியான குதிரைகள் “ - பாவத்திலிருந்து மனந்திரும்பி, கர்த்தரிடம் சீர்பொருந்துகிற உலக மனுக்குலத்தை குறிப்பதாக நாம் வாசிக்கிறோம் -

**சங்கீதம்22:27,28**

“பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது, அவர் ஜாதிகளை ஆளுகிறவர்”

இறுதியாக இந்த தீர்க்கதரிசனத்தின் முடிவைக் குறித்து **சகரியா 6: 8** ல் வாசிக்கிறோம் -

“வடதேசத்திற்கு புறப்பட்டுப் போனவை என் கோபத்தை சாந்திபண்ணிற்று”

இதன் அர்த்தம் என்னவென்றால், நாம் முன்பே பார்த்தோம் - வடதேசத்திற்கு புறப்பட்டுப்போனது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை குறிக்கிறது. சபையின்மூலம் தேவனுடைய கோபம் நீங்கியது என்பதை இது குறிக்கிறது.

**1பேதுரு 2: 9**

“தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும்,பரிசுத்த ஜாதியாயும்,அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்”

பாவிகளான நம்மை தேவன் தம் சொந்த ஜனமாக நினைக்கிறார் இவர்கள் தேவ நாமத்தின்மீதும், நீதியின்மீதும்கொண்டுள்ள வைராக்கியம் மற்றும் அன்பினிமித்தம் தேவன் ஆறுதலடைகிறார்.

**சங்கீதம் 33:12**

“கர்த்தரைத் தங்களுக்கு தெய்வமாக கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது”

இந்த சிறுமந்தையாகிய மணவாட்டி வகுப்பார் தேவனுடைய பொக்கிஷமாக, அவருடைய தெய்வீகக் குடும்பமாக இருப்பார்கள்.

ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் மனுக்குலத்திற்கு தேவன் அளிக்கிற பரிசுகளைக் குறித்து நாம் வாசிப்போம் -

**ஏசாயா 19:25**

“எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரயேலராகிய என் சுதந்திரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி அவர்களை ஆசீர்வதிப்பார்”

**முதல் பரிசு**:- எகிப்தியராகிய என் ஜனம் - 1000 வருட அரசாட்சியில் பூமியில் வாழும் உலக ஜனங்களை குறிக்கிறது

**2ம் பரிசு** :- அசீரியராகிய என் கரத்தின் கிரியை - இது முற்பிதாக்களைக்குறிக்கிறது
“ஏதெனின் நான்கு ஆறுகள்” பாடத்தில், மூன்றாவது நதி - இதக்கேல், அசீரியாவிற்கு கிழக்கே பாய்ந்தது. இது முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது.

**3வது பரிசு** - இஸ்ரயேலராகிய என் சுதந்திரம்- சபை வகுப்பாரைக் குறிக்கிறது.

**கலாத்தியர் 6:16**

“கிறிஸ்து இயேசுவுக்குள் ..புது சிருஷ்டியே காரியம். இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரயேலருக்கும் சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக”

ஆவிக்குரிய இஸ்ரயேலர் - கிறிஸ்துவின் சபை.

**யோபு 14:4**

“அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை“

1000 வருட அரசாட்சியில்அசுத்தம் சுத்தமாக மாறும்.

முதலாம் இரதத்தில் பூட்டப்பட்டிருந்த சிவப்புக் குதிரைகளுக்கு (முற்பிதாக்கள்) எந்த திசையும் குறிப்பிடப்படவில்லை. இது எதைக் குறிக்கிறதென்றால், முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் ஒரு மேன்மையான உயிர்த்தெழுதலாக**(எபி 11:35)**, பரிபூரண மாம்சீக நிலையில் இருக்கும். ஆனால் ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் மனுக்குலம் மாம்சீக பரிபூரணத்தை அடைவதைக் காண்கிறோம்.

முற்பிதாக்களுக்கு முழுமையான ஆவிக்குரிய இரட்சிப்பு(வடதேசம்) என்றோ, அல்லது முழுமையான பூமிக்குரிய இரட்சிப்பு என்றோ கூறமுடியாது. இவர்கள் தேவனுடையஆவிக்குரிய தூதுவர்களாக, அதாவது தேவைப்பட்டபொழுது ஆவிக்குரிய சரீரத்தில் வெளிப்படும் வல்லமை இருந்தாலும், பெரும்பாலும் மாம்ச ஜீவிகளாக இருப்பார்கள் என்பதேயாகும். தேவன் தம் பணியை 7ம் நாளில் நிறைவேற்றினபின்பு, அதைத் தொடர்ந்துவரும் யுகாயுகங்களில் துவங்க இருக்கும் சிருஷ்டிப்பு வேலைகளின்போது, பூமியிலிருந்து மற்ற கிரகங்களுக்கும் பயணிப்பார்கள்.

தேவன் தாமே தம் சத்தியத்தின் மூலம் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/biblereserch/